பருத்தித்துறையிலும்
குருதித் தட்டுப்பாடு!
விரிவு பக்கம்:- 02



Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 108

சனிக்கிழமை
14 மார்ச் 2026

மாசி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

கிளிநொச்சியில் போட்டியிட்ட

## உள்ளூராட்சி வேட்பாளர்கள் 79 பேருக்கு எதிராக வழக்கு!

**கிளிநொச்சி, மார்ச் 14**

கிளிநொச்சி மாவட்டத்துக்கு உட்பட்ட, உள்ளூராட்சி சபைகளுக்குப் போட்டியிட்டு, செலவு அறிக்கைகளைத் தாக்கல் செய்யாத 79 வேட்பாளர்களுக்கு எதிராக, தனித்தனியாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. »11

மாகாணசபைத் தேர்தல்

## 20ஆம் திகதியன்று விசேட குழு ஆய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 14
மாகாணசபைத் தேர்தலை எந்த முறையின் கீழ் நடத்துவது என்பது தொடர்பில் ஆராய்வதற்காகவும், பரிந்துரைகளை முன்வைப்பதற்காகவும் அமைக்கப்பட்டுள்ள விசேட குழு எதிர்வரும் 20ஆம் திகதியன்று முதன்முறையாகக் கூடவுள்ளது. மாகாண »11



## மயிலிட்டிக் காணிகள் விரைவில் விடுவிப்பு!

அமைச்சர் சந்திரசேகர் உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 14
பாதுகாப்புத் தரப்பினரின் வசமுள்ள மயிலிட்டிக் காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என்று அமைச்சர் சந்திரசேகர் உறுதிபடக் கூறியுள்ளார். மயிலிட்டி மக்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக நேற்று »11

## பழிவாங்குகின்றார் பவானந்தராஜா எம்.பி.

பிரதேசசபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 14
அபிவிருத்திக்கூட்டங்களில் தம்மைப் புறக்கணிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் பவானந்தராஜா செயற்படுகின்றார் என்று வலி.தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்கள் சிலர் குற்றஞ்சாட்டி »11

ஆளணிப் பற்றாக்குறை

## முடங்குகின்ற நிலையில் முல்லை. மருத்துவமனை

விரிவு பக்கம்:-12

குழப்பம் செய்கின்ற

## எம்.பி.யைக் கட்டுப்படுத்தாத ஆளுநர் தவிசாளரைக் குறைகூறலாமா?

சாவகச்சேரி நகரசபை விவகாரத்தில்
சிரேஷ்ட சட்டத்தரணி குருபரன் வாதம்



யாழ்ப்பாணம், மார்ச் 14
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களைக் குழப்பும் வகையில் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினரைக் கட்டுப்படுத்த முடியாத ஆளுநர், சாவகச்சேரி நகர சபைத் தவிசாளருக்கு எதிராகக் குற்றச்சாட்டை முன்வைப்பது வேடிக்கை »11



## மேல்நீதிமன்ற நீதிபதியாக எஸ்.சதீஸ்தரன் நியமனம்!

யாழ்ப்பாணம், மார்ச் 14
சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றிய எஸ்.சதீஸ்தரன், மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதி அநுர வால், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்று கையளிக்கப்பட்டது.
(அ-ம-26-66-20)

## 25 வீதமான மக்கள் வறுமையின் பிடியில்

அமைச்சர் உபாலி சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 14
இலங்கையில் 25 வீதமான மக்கள் வறுமையின் பிடிக்குள் உள்ளனர் என்று, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- »11

டெங்கு ஏதுநிலை

## 10 பேருக்கு எதிராக நீதிமன்றம் தண்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 14
டெங்கு பரவுவதற்கு ஏதுவான சூழல் காணப்பட்ட 10 ஆதனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக, பருத்தித்துறை நீதவான் நீதிமன்றால் 66 ஆயிரம் ரூபா »11



முரசத்தி முரளி

"இலகின இரும்பிலதான் எல்லாரும் தங்கட வீரத்தைக் காட்டுவினம் கண்டியளோ"

அடர்வனங்கள் அழிப்பு

## மகாவலி அதிகாரசபைக்கு மரணதண்டனை விதிக்குக

ரவிகரன் எம்.பி. கடும் காட்டம்



வவுனியா, மார்ச் 14
வவுனியாவில் அடர் வனங்கள் வகை தொகை இன்றி அழிக்கப்படுகின்றன. மகாவலி அதிகாரசபை இதற்குத் துணைபோகின்றது. இந்த விடயத்தில் மகாவலி அதிகார சபைக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார். விவசாயம், கால்நடை வளங்கள், »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4374 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 15 35 45 64 |
| விசேட எழுத்து | O |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1441 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 06 19 54 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0400 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 3 1 4 5 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2480 |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கங்கள் | 14 18 41 77 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6132 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 3 4 1 5 5 4 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2162 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 13 16 26 37 |
| விசேட எழுத்து | M |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0248 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 16 60 |

# மத்திய கிழக்குப் போரால் போராட்டம் வெடிக்கலாம்

## பேராசிரியர் டியூடர் வீரசிங்க சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 14**

**மத்திய கிழக்கில் போர் நீடித்தால் உலகப்பொருளாதாரம் ஒரு நீண்டகால மந்த நிலையைச் சந்திக்க நேரிடும். இது நாடுகளுக்குள் அரசியல் மாற்றங்களையும், மக்கள் போராட்டங்களையும் உருவாக்கக்கூடும் என்று ஸ்ரீபாலி பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் டியூடர் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த நிலைமையைத் தவிர்க்க சிறிய நாடுகள் ஒன்றிணைந்து பிராந்திய ரீதியான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதும், உள்நாட்டுப் பொருளாதார மேலாண்மையைச் சீரமைப்பதும் அவசியமாகும்.

எரிபொருள் மற்றும் எரிவாயுவை முழுமையாக இறக்குமதி செய்யும் நாடுகள், தமது வெளிநாட்டுக் கொள்கைகளை மீளாய்வு செய்யவேண்டிய கட்டாயத்தில் உள்ளன. அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளை மட்டும் சார்ந்து இருக்காமல், ரஷ்யா போன்ற நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி எரிசக்தி விநியோகத்தை உறுதிப்படுத்துவது அவசியம்-என்றார். (எ-இ)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0840 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 0 0 2 3 9 1 |

**Super Ball DLB**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3106 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 09 20 22 32 |

**சனிதா DLB**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 28 39 49 55 |
| வெற்றி வாரம் | 5267 |

**SASIRI DLB**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0936 |
| வெற்றி இலக்கம் | 19 41 50 |

**லக்ன ராசி DLB**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| துலாம் | |
| வெற்றி இலக்கம் | 05 37 40 41 |
| சீட்டிழுப்பு வாரம் | 4818 |

**KAPRUKA DLB**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 36 |
| வெற்றி இலக்கம் | 09 15 27 39 |
| வெற்றி வாரம் | 2282 |

**அத கோடிபதி DLB**

| | |
|---|---|
| திகதி | 13.03.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கம் | 55 57 63 70 |
| வெற்றி வாரம் | 2932 |

## பருத்தித்துறையிலும் குருதிக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 14

பருத்தித்துறை குருதி வங்கியில், சகல குருவகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கையிருப்பில் உள்ளதும், அடுத்துவரும் சில நாள்களுக்குள் முடிந்துவிடும் என்று குருதி வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு நாளாந்தம் 6 தொடக்கம் 12 பைந் குருதி தேவைப்படும் நிலையில், அடுத்துவரும் ஒரு சில நாள்களுக்குத் தேவையான குருதியே கையிருப்பில் உள்ளது. எதிர்வரும் நாள்களில் பெரும் குருதித் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. எனவே குருதித்தான முகாம்களை ஏற்பாடுசெய்யக் கூடிய பொது அமைப்புகள் 0212261345 எனும் தொடர்பிலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளவும். தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு நேரடியாக வருகைதந்து குருதிக்கொடை வழங்குமாறும் குருதி வங்கிப் பிரிவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (க-100)

## சமையல் எண்ணெய்க்கு சந்தையில் தட்டுப்பாடு!

கொழும்பு, மார்ச் 14

உள்ளூர்ச் சந்தையில் மரக்கறி எண்ணெய் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று பேக்கரிகள் மற்றும் சிற்றுண்டி உணவு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தட்டுப்பாட்டைச் சாதகமாகப் பயன்படுத்தி, சந்தையில் எண்ணெய்களின் விலையை வர்த்தகர்கள் அதிகரித்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்களின் தட்டுப்பாடு காரணமாக, உள்ளூர்த் தேங்காய் எண்ணெயின் விலையும் லீற்றருக்கு 100 ரூபா வரை உயர்ந்துள்ளது. புத்தாண்டுக் காலத்தில் பலகாரங்கள் மற்றும் உணவுத் தயாரிப்புகளுக்குத் தேங்காய் எண்ணெயின் தேவை அதிகரிக்கும் சூழலில் தட்டுப்பாடு தொடர்ந்தால், விலை மேலும் பல மடங்கு அதிகரிக்கக்கூடும்.

இலங்கைக்குத் தேவையான மரக்கறி எண்ணெய் மற்றும் ஏனைய சமையல் எண்ணெய்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளே தற்போதைய பற்றாக்குறைக்குக் காரணமாகக் கூறப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அச்சு இயந்திரத்தில் சிக்கி ஒருவர் சாவு!

கொழும்பு, மார்ச் 14

பிலியந்தலை - கொரகபிட்டிய பகுதியில் அமைந்துள்ள தனியார் அச்சு நிறுவனம் ஒன்றில் பணியாற்றிவந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் அச்சு இயந்திரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞர் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு ஒன்றைச் சரிபார்ப்பதற்காக ஒருபுறமாக இயந்திரத்துக்குள் தலையை நுழைத்துள்ளார். அச்சு இயந்திரம் எதிர்பாராத விதமாக இயங்கத் தொடங்கியுள்ளது. இதில் தலை இயந்திரத்தினுள் சிக்கிப் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் அவர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் சிகிச்சையின்போது அவர் உயிரிழந்துள்ளார். (ச-இ)

## ஷசீந்திரவுக்கு எதிரான விசாரணைகள் நிறைவு

கொழும்பு, மார்ச் 14

ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டு, தற்போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ச உள்ளிட்ட சந்தேகநபர்களுக்கு எதிரான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று நேற்றுக் கொழும்பு நீதவான் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, விசாரணை நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு மேலதிக கால அவகாசம் தேவையென அதிகாரிகள் கோரினர்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களைப் பரிசீலித்த நீதவான், இந்த வழக்கை மீண்டும் எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதி அழைக்குமாறு உத்தரவிட்டார். (எ-இ)

## தரித்துநின்ற கார் நகர்ந்து 7 வயதுச் சிறுவன் மரணம்!

கண்டி, மார்ச் 14

கண்டி, மஹியாவ பகுதியிலுள்ள ஒரு சர்வதேச பாடசாலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனம் திடீரென நகர்ந்து மோதியதில் அதே பாடசாலையில் கல்வி பயிலும் 7 வயதுச் சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான். நேற்று முன்தினம் பாடசாலை இடைவேளை நேரத்தின் போது இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

பாடசாலையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர், தனது வாகனத்தைப் பாடசாலை வளாகத்தில் நிறுத்திவிட்டு அதிலிருந்து இறங்கிச் சென்றுள்ளார்.

அவர் இறங்கிய சிறிது நேரத்தில், வாகனத்தின் பிரேக் பகுதியில் ஏற்பட்ட திடீர்க் கோளாறு காரணமாக வாகனம் தானாக நகரத் தொடங்கி பாடசாலை வளாகத்தில் தண்ணீர் அருந்திக் கொண்டிருந்த இரண்டு மாணவர்கள் மீது கட்டுப்பாட்டை இழந்து மோதியது.

வாகனத்தின் அடியில் சிக்கிய 7 வயதுச் சிறுவன் சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்துள்ளார். காயமடைந்த மற்றைய மாணவன் தற்போது கண்டி தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் நடுப்பகுதிவரை எரிபொருள் கையிருப்பு






## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 14**

**எரிபொருள் விநியோகத்தில் எவ்விதத் தட்டுப்பாடும் ஏற்படாது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதி வரையான காலப்பகுதிக்குத் தேவையான எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ராஜகருண தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் எரிபொருள் விநியோகக் கட்டமைப்பை சிறந்த முறையில் பேணுவதற்காகவே எரிபொருள் விலை தற்காலிகமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைவடைந்தால்அதன்உச்ச பயனை நாட்டு மக்களுக்கு வழங்குவோம். எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதி வரையான காலப்பகுதிக்குத் தேவையான எரிபொருள் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே எரிபொருள் விநியோகக் கட்டமைப்பில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. எதிர்வரும் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாட்டுக்கு 2 எரிபொருள் கப்பல்கள் வரவுள்ளன. இவற்றில் 35 ஆயிரம் முதல் 45 ஆயிரம் மெற்றிக்தொன் வரையான டீசல் மற்றும் பெற்றோல் தொகை அடங்குகின்றன. இந்த எரிபொருள் தொகை இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

எரிபொருள் விநியோகத்தில் எவ்வித தட்டுப் பாடும் ஏற்படாது. தேவைக்கு மேலதிகமாக எரிபொருள் கொள்வனவு செய்வதைப் பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் - என்றார். (ச-இ)

## 6 இலட்சத்துக்கும் அதிக சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு, மார்ச் 14

2026ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 6 இலட்சத்தைத் தாண்டியுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மொத்தம் 623,651 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். மேலும், மார்ச் மாதத்தின் முதல் 11 நாள்களில் மாத்திரம் 66,996 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## ‘சிசு செரிய’ சேவைக்கு 200 புதிய பேருந்துகள்

கொழும்பு, மார்ச் 14

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக, 2026ஆம் ஆண்டில் 200க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகளை ‘சிசு செரிய’ சேவையில் இணைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கம் இந்த ஆண்டு ஒரு பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுடன் போக்குவரத்து அமைச்சு இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்கிறது. மாணவர்களின் பாதுகாப்பான பயணமே அரசாங்கத்தின் முதன்மையான கொள்கை என்று கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன தெரிவித்தார். (ச-இ)



## மின் கட்டணத் திருத்தம்: இந்த மாதத்துக்குள் முடிவு

கொழும்பு, மார்ச் 14

2026ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முடிவு இந்த மாத இறுதிக்குள் அறிவிக்கப்படவுள்ளது.

ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலப்பகுதிக்கு 13.56 சதவீத மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதற்கு அனுமதி கோரி, இலங்கை மின்சாரசபை அண்மையில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்திருந்தது. தற்போது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இதுதொடர்பாக மக்கள் கருத்தறியும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. இந்தநிலையில், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இறுதி முடிவு இந்த மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## ஈரானியர்களின் உடல்களை நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை

காலி, மார்ச் 14

காலிக் கடற்பகுதியில் அமெரிக்காவின் தாக்குதலுக்குள்ளாகி மூழ்கிய ‘ஐரிஸ் டெனா’ கப்பலில் உயிரிழந்த 84 ஈரானிய மாலுமிகளில், 45 பேரின் உடல்களை ஈரானுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

காலிபோதனா மருத்துவமனையின் இரண்டு குளிரூட்டப்பட்ட அறைகளில் வைக்கப்பட்டிருந்த 45 உடல்களும் மத்தல விமான நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கிருந்து ஈரானுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

கடந்த 4ஆம் திகதி காலித் துறைமுகத்திலிருந்து சுமார் 19 கடல் மைல் தொலைவிலுள்ள சர்வதேச கடற்பகுதியில் வைத்து, அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் நடத்திய தாக்குதலில் ஈரானுக்குச் சொந்தமான [illegible]

## கொஞ்சம் கவனியுங்கோ!

ஆக்கிறதை விட அழிக்கிறது ஈஸி எண்டு எல்லாரும் சொல்லுவினம். ஆனால் இதுக்கு எதிர்மாறாவும் சில விசயங்கள் நடக்கத்தான் செய்யுது. அதுவும் யாழ்ப்பாணத்தில ஏதும் ஒரு விசயத்தைச் செய்தாலோ, உருவாக்கினாலோ பிறகு அதை அவ்வளவு லேசில அழிக்கேலாது. அதுக்கு நல்ல உதாரணம் தான் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குப் பின்னால இருக்கிற விக்டோரியா வீதியில போடுப்பட்டிருக்கிற ‘ஸ்பீட் பிரேக்கர்கள்’. அந்த றோட்டால முன்னப் பின்ன போகாதவை மோட்டர் சைக்கிளிலையோ இல்லாட்டி வாகனங்களிலையோ போனால், கட்டாயமா அந்த றோட்டில இருக்கிற ரண்டு ஸ்பீட் பிரேக்கர் மாதிரி றோட்டுக்குக் குறுக்க கட்டியிருக்கிற ‘ஜம்மிங்கில’ ஒருக்கா குலுங்கி விழுந்து, பிறகு ஒருக்கா அதிர்ந்துதான் அங்கால போவியள். சிலவேளையளில கிட்டப் போனபிறகு அங்க ஸ்பீட் பிரேக்கர் இருக்கிறதைக் கண்டிட்டு வேகத்தைக் குறைக்கிறமெண்டு பிறேக்கை ஒத்திப் பிடிச்சியளெண்டால், சறுக்கி விழவும் சான்ஸ் இருக்கு. கொஞ்சப்பேர் அப்பிடி விழுந்துமிருக்கினம்.

விக்டோரியா றோட்டிலதான் கனகாலமாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின்ர சில கிளினிக்குகளை நடத்தினவை. அது தனியாரின்ர கட்டடமா இருந்தாலும், பெரியாஸ்பத்திரியின்ர கிளினிக்கை நடத்துறதுக்காக குடுத்திருந்தவை. அந்தக் கிளினிக்கு வாற வயது போனவை, வருத்தக்காரரை றோட்டால கண்ணைமூடிக் கொண்டு பறக்கிற வாகனங்கள் மோதக்கூடாது எண்ட முன்னெச்சரிக்கையாத்தான் அதில ரண்டு ‘ஸ்பீட் பிரேக்கர்’ போட்டவை. எப்பிடி வருத்தக்காரரில இருக்கிற அக்கறையால இந்த ‘ஸ்பீட் பிரேக்கர்களை’ கட்டிச்சினமோ, வாகனமோடுறவையிலையும் அதே அக்கறையோட தூரத்தில வரேக்கையே அந்த ‘ஸ்பீட் பிரேக்கர்களை’ கவனிக்க வைக்கிறதுக்காக பெரிய வெள்ளைச் சாய்வுக்கோடுகளை அதில கீறியிருந்தவை. அதால அந்த றோட்டுக்குள்ள வாகனங்கள் வந்தவுடனேயே ரண்டு ‘ஸ்பீட் பிரேக்கர்களும்’ இருக்கெண்டு வாகனம் ஓடுறவைக்குத் தெரிஞ்சிடும், அவையும் அதுக்கேத்தபடி மெதுவா போய் வந்திச்சினம்.

இப்ப அந்தக் கிளினிக் எல்லாம் மூடி, ஆஸ்பத்திரிக்குள்ள கொண்டுபோட்டினம். இவ்வளவு காலமும் ஆஸ்பத்திரிக்குத் தங்கட கட்டடத்தைக் குடுத்திருந்த தனியார், அதுகளைத் திரும்ப தாங்களே பாவிக்க வெளிக்கிட்டிட்டினம். அதால இப்ப அந்த றோட்டில முந்தின மாதிரி அள்ளுகொள்ளையா வருத்தக்காரரையோ, வயதுபோன ஆக்களையோ காணேலாது. ஆனால் கிளினிக்குகளை மூடின பிறகும் தேவையேயில்லாத ஆணியா அந்த ரண்டு ‘ஸ்பீட் பிரேக்கர்களும்’ அதிலதான் இருக்கு. முந்தியெண்டாலும் அந்த ரண்டுக்கும் முகம் கழுவி, பவுடர் போட்டுவிடுறமாதிரி அடிக்கடி வெள்ளைக் கோட்டைக் கீறிவிடுவினம். அந்தக் கோடுகளும் தூரத்திலேயே பளிச்செண்டு தெரியும். ஆனால் இப்ப அப்பிடி இல்லை. அற்ற குளத்து அறுநீர்ப் பறவையள், தண்ணி இல்லாட்டி அந்தக் குளத்தைச் சீண்டாமலே விடுறமாதிரி, கிளினிக்குகள் அங்க இல்லாமல் போனபிறகு இந்த ரண்டு ‘ஸ்பீட் பிரேக்கர்களையும்’ பொறுப்பானவை கண்டுகொள்ளுறதே இல்லை. வெள்ளைக் கோடுகளின்ர பெயிண்ட் அழிஞ்சு போய், றோட்டுக்கும் அந்த ‘ஸ்பீட் பிரேக்கர்களுக்கும்’ வித்தியாசம் கண்டுபிடிக்கவே கஷ்டமாக் கிடக்கு. அதால அடிக்கடி கனபேர் அந்த இடங்களில ஒருக்கா நிலைதடுமாற வேண்டிக்கிடக்கு. ஒண்டில் அந்த ‘ஸ்பீட் பிரேக்கர்களை’ எடுத்துவிடோணும், இல்லாட்டி அதுகளுக்கு முந்தின மாதிரி வெள்ளைக்கோடுகளைப் பளிச்செண்டு தெரியிற மாதிரிக் கீறிவிடோணும். உரியவை செய்வினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப்பரவலும் கருத்துரையும்

யாழ்ப்பாணம், மார்ச் 14

கலாபூஷணம் செல்லையா குமாரசாமியின் நினைவுப்பரவலும், அவர் எழுதிய நூல்கள் பற்றிய கருத்துரை நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் இணுவில் அறிவாலயத் தலைவர் தகைசால் வாழ்நாள் பேராசிரியர் வி.மகேஸ்வரன் தலைமையுரையையும், இணுவைத் தமிழ்ச் சங்கச் செயலாளரும் இணுவில் அறிவாலய ஆசிரியருமான யோ.சுதந்திரன் நினைவுப்பரவலினையும் வழங்கவுள்ளனர்.

இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் ஓய்வு பெற்ற அதிபர் கவிஞர் நாக.சிவசிதம்பரம் சிறுவர் பாடல்கள் தொடர்பாகவும், இணுவில் அறிவாலய உபசெயலாளரும் சுயாதீன ஊடகவியலாளருமான க.சர்வானந்தா சிறுவர் நவீனம் தொடர்பாகவும், இணுவைத் தமிழ்ச் சங்கம், யாழ்ரன் கல்லூரி உப அதிபர் இணுவை கிஸ்ணா கிள்ளைவிடு தூது தொடர்பாகவும், இணுவில் கலை இலக்கிய வட்டம் உளவளத்துணையாளர் நம்.ஞான சுரியர் மண்ணைத் தொடாத விழுதுகள் தொடர்பாகவும், இணுவில் கலை இலக்கிய வட்டம் யாழ்.பல்கலைக்கழக மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறை பேராசிரியர் க.ஸ்ரீகணேசன் பயிர்மேயும் வேலிகள் தொடர்பாகவும், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலன் கூடில்லாக் குஞ்சுகள் தொடர்பாகவும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (எ-41-159)

# தேசிய வீடமைப்புத் திட்டம் முல்லைத்தீவில் ஆரம்பம்

**முல்லைத்தீவு, மார்ச் 14**

**ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, 'தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் 2026' எனும் தொனிப்பொருளின் கீழ், மாகாணசபைகளின் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஆரம்ப நிகழ்வு நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.**



வடக்கு மாகாணத்துக்குரிய ஆரம்ப நிகழ்வு முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாண நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனும், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ம.சர்மிலீ, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெ.ரதீஸ்வரன், மாந்தை கிழக்குப் பிரதேசசபைச் செயலாளர் திருமதி பா.சிவதர்சினி மற்றும் பிரதேசசபையின் உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், பயனாளிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-56)



# சட்டவிரோத இலத்திரனியல் உபகரணங்கள் யாழில் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழிலுள்ள இரண்டு கடைகளிலிருந்து, சட்டவிரோத இலத்திரனியல் உபகரணங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

இலத்திரனியல் உபகரணங்களை விற்பனை செய்கின்ற, யாழ்ப்பாணத்தில் உள்ள 4 கடைகளிலும், ஊரெழுப் பகுதியிலுள்ள ஒரு கடையிலும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ்ப்பாணப் பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர். அதில் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் அனுமதியின்றி 2 கடைகளில் இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட சட்டவிரோத இலத்திரனியல் பொருள்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-27,20)

# மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 14

அரியாலை சனசமூக நிலையத்தின் மகளிர் தின நிகழ்வு நிலைய மைதானத்தில் இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. மாதர்ப் பகுதித் தலைவர் திருமதி ஸ்ரீமோகன் உஷாஜினி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் பிரதம விருந்தினராகவும், நல்லூர்ப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பிரௌன்சன் ரேவதி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-41-66)

# பொதுக்கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச பண்பாட்டுப் பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வருட கலாசாரச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதுடன் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளதால் கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் உட்பட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் எவ்.சீ.சத்தியசோதி அறிவித்துள்ளார். (ச-9)

# பின்தங்கிய கிராமங்களுக்கு வடக்கு ஆளுநர் களப்பயணம்

முல்லைத்தீவு, மார்ச் 14

முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாலைப்பாணி மற்றும் கொம்புவைச்சகுளம் ஆகிய பின்தங்கிய கிராமங்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று முன்தினம் களப்பயணத்தை மேற்கொண்டு, அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினார்.

தமது நீண்டகாலப் பிரச்சினைகளை மக்கள் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். பல ஆண்டுகளாக அடிப்படை வசதியான வீதிப்போக்குவரத்துச் சீரமைக்கப்படாமையால், இரண்டு கிராமங்களையும் சேர்ந்த பல குடும்பங்கள் நகர்ப்புறங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளன. வீதி மிகமோசமாகச்சிதைவடைந்துள்ளதால், அவசர மருத்துவத் தேவைகளுக்காக நோயாளிகளை உரிய நேரத்துக்கு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது என்று மக்கள் சுட்டிக்காட்டினர்.

பற்றைக்காடுகள் வளர்ந்து பயணிக்க முடியாதவாறுள்ள கிடாப்பிடிச்சகுளம் கொம்புவைச்சகுளம் வீதியைத் துப்புரவு செய்து தருமாறும் கொம்புவைச்சகுளம் மக்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

மக்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்த ஆளுநர், சுமார் 18 கிலோமீற்றர் நீளமான மாங்குளம் மூன்றுமுறிப்பு பிரதான வீதியைக் கட்டம் கட்டமாகப் புனரமைத்து மக்களின் பயன்பாட்டுக்குக் கையளிக்க உரிய நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். (சு-35)



# முருகன் கிராமத்தில் வீதிகள் புனரமைப்பு

மன்னார், மார்ச் 14

கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ், மன்னார் பேசாலை முருகன் கோவில் கிராமத்தின் பிரதான வீதி மற்றும் உள்ளக வீதிகள் புனரமைக்கப்படுகின்றன. மன்னார் தலைமன்னார் பிரதான வீதியின் முருகன் கோவில் சந்தியிலிருந்து, முருகன் கோவில் கிராமத்துக்கான பிரதான வீதி காப்பெற் வீதியாகவும், ஒரு பகுதி கொங்கிறீட் வீதியாகவும் புனரமைக்கப்படுகின்றது. அத்துடன் கிராமத்தில் அடையாளம் காணப்பட்ட 3 உள்ளக வீதிகள் கொங்கிறீட் வீதிகளாகப் புனரமைக்கப்பட்டுள்ளன. இந்த வீதிகளின் நிர்மாணப் பணிகளை மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டுள்ளது. (க-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




உண்மை - நேர்மை - அஞ்சாமை

# ஊனை உருக்கி...!

**30** ஆண்டுகளுக்கும் மேலாக அரசியற்கைதியாக சிறையில் வாடும் கதிர்காமத்தம்பி சிவகுமாரின் சகோதரி சுப்பிரமணியம் கமலாதேவி புற்றுநோய் காரணமாகக் காலமாகியுள்ளார். அவரின் மறைவுடன் கதிர்காமத்தம்பி சிவகுமாரின் உலகம் காரிருளால் சூழப்பட்டிருக்கின்றது. அரசியற்கைதியான சிவகுமார் சிறுவனாக இருக்கும்போதே அவரின் பெற்றோர் இருவரும் காலமாகிவிட, அவரின் ஒற்றைச் சகோதரியான கமலாதேவியே தந்தையாகவும் தாயாகவும் இருந்து அவரை வளர்த்து வந்தார். ஆதலால், கதிர்காமத்தம்பி சிவகுமாரின் ஒட்டுமொத்த உலகமும், ஒரேயொரு உறவும் அவருடைய சகோதரியான சுப்பிரமணியம் கமலாதேவி மட்டுமே. இனி, சிவகுமார் விடுவிக்கப்பட்டாலும், அவரது வாழ்வு 'திறந்தவெளிச் சிறையாகத்தான்' இருக்குமே தவிர, அந்த விடுதலையில் வாழ்தலுக்கோ அல்லது கொண்டாட்டத்துக்கோ ஒன்றுமே இல்லை.

அரசியற்கைதிகளின் விடயத்தில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தாமதங்கள் எத்தகைய பாதிப்புகளையும், விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன என்பதற்கு கதிர்காமத்தம்பி சிவகுமாரின் வாழ்க்கை மிகச்சிறந்த சான்றாதாரமாக அமைந்துள்ளது. அத்துடன், இந்தத் திசைகாட்டி அரசாங்கமும் எவ்வளவு பெரிய தவறுகளை இழைத்து வருகின்றது என்பதற்கும் இந்தச் சாவு சாட்சியமாகியுள்ளது. அரசியற்கைதிகளின் விவகாரத்தை அணுகுவதற்காக அமைக்கப்பட்டுள்ள விசேட குழுவின் பரிந்துரைக்கு அமைய, அவர்களை விடுவிக்கவும் -தண்டனைகளைக் குறைக்கவும் பரிசீலனைகள் இடம்பெறும் என்று நீதியமைச்சர் அண்மையில் உறுதிபடக் கூறியிருந்தார். ஆனால், இன்றளவும் எவ்விதமான நல்ல செய்திகளும் தமிழர் தாயகத்துக்குக் கிடைக்கவில்லை. கிடைப்பதெல்லாம் பொத்தம் பொதுவான வெற்று அறிவிப்புகள் மட்டுமே.

நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளில் இன்னமும் ஏராளமான தமிழ் அரசியற்கைதிகள் உள்ளனர். வழக்கு விசாரணைகள் முழுமையாக ஆரம்பிக்கப்படாமலும், கிடப்பில் போடப்பட்டும் அவர்கள் தொடர்ச்சியாகப் பழிவாங்கப்பட்டே வருகின்றனர். சில அரசியற்கைதிகள் விடுவிக்கப்பட்ட போதிலும், நீதிமன்றங்களில் முன்னெடுக்கப்பட்ட சட்டப் போராட்டத்தின் அடிப்படையில் அமைந்த விடுவிப்பாகவே அது அமைந்திருந்ததே தவிர, அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட விடுவிப்பாக இருக்கவில்லை. ஆனால், இந்த விடயத்தில் விரைவாகச் செயற்பட வேண்டியது அரசாங்கம்தான். அரசியற்கைதிகளின் விடுதலைக்கான சட்ட ஏற்பாடுகளின் பாற்பட்ட அதிகாரக்குவிப்பும் அரசாங்கத்திடமே உள்ளது.

விடுதலைப்புலிகள் மௌனித்து ஒன்றரைத் தசாப்தங்கள் தாண்டிவிட்டன. எனவே, அரசியற்கைதிகள் தொடர்பான வழக்குகள் இனியாவது திறக்கப்படவும், விரைவாக முடிவுறுத்தப்படவும் வேண்டும். சிறைக்கம்பிகளை விட்டு வெளியில் வந்து, ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்வதே அவர்களின் நோக்கமாகவும், விருப்பாகவும் உள்ளது. அந்தத் தவிப்பின் பின்னாலுள்ள கதைகளின் வலிகள் மிகக் கொடியன. அது மறுக்கப்படும் பட்சத்தில், அதனால் ஏற்படும் இழப்பு எத்தனை பெரியது என்பதற்கு கதிர்காமத்தம்பி சிவகுமார், ஆனந்த சுதாகர் உள்ளிட்டோர் மிகச் சரியான சாட்சியங்கள். ஆதலால், குறைந்தபட்சம் அனைத்துக்குமான பரிகாரத்தைத் தேடுவதற்காகவாவது அரசாங்கம் அரசியற்கைதிகளை விடுவிக்கவேண்டும் என்பதே ஈழத் தமிழர்களின் இறுதி எதிர்பார்ப்பாகும்.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## பொய்யாமொழி

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்**

**பொருள்:** அன்புக்கும் அடைத்துவைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே (உள்ளே இருக்கும் அன்பைப்) பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்.




# பண்டிகைக் காலத்தில் இணைய மோசடிகள்



## மக்கள் அவதானம்

**கொழும்பு, மார்ச் 14**

**எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, இணையத்தில் வெளியாகும் விளம்பரங்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்று இலங்கை கணினி அவசரப்பிரிவு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் அந்தப் பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் சருக தமுனுபொல தெரிவித்துள்ளதாவது-

இந்த ஆண்டின் கடந்த இரண்டு மாதங்களில் இணையவழி மோசடிகள் தொடர்பான பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தமிழ் மற்றும் சிங்களப் புத்தாண்டுக் காலப்பகுதியில் தள்ளுபடிகள், பரிசுப் பொருள்கள் அல்லது விசேட சலுகைகள் என்ற பெயரில் போலியான விளம்பரங்கள் மற்றும் லிங்குகள் இணையத்தில் பரவக்கூடிய அபாயம் அதிகமுள்ளது.

இணைய இணைப்புகள் மூலம் பயநர்களைப்போலியான இணையத் தளங்களுக்கு அழைத்துச் சென்று, அவர்களின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் முக்கியமான தரவுகளைத் திருடும் அபாயம் காணப்படுகின்றது.

எனவே, இணையம் ஊடாகக் கிடைக்கும் அறிமுகமில்லாத இணைப்புகள் அல்லது விளம்பரங்களைப் பயன்படுத்தும் போது மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும்- என்றார். (ச-இ)

## போதைப்பொருள்கள் கையிருப்பு அழிப்பு!

கொழும்பு, மார்ச் 14

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் பல்வேறு காலப்பகுதிகளில் கைப்பற்றப்பட்டு, நீதிமன்ற வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த பெருமளவிலான போதைப்பொருள்களை அழிக்கும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அவை தீயிட்டு அழிக்கப்பட்டன.

40 கிலோ 533 கிராம் ஹெரோய்ன், 132 கிலோ 79 கிராம் கஞ்சா, 55 கிராம் கொக்ஹெய்ன், 3,482 போதைமாத்திரைகள் என்பனவே அழிக்கப்பட்டுள்ளன. (ச-இ)


## பஸ் மோதியதில் பாதசாரி பலி!

கொழும்பு, மார்ச் 14

தங்கல்லை ரன்ன வீதியில் பஸ் மோதியதில் பாதசாரி ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். பஸ்ஸிலிருந்து பயணிகள் இறங்கிய பின்னர் பஸ் மீண்டும் பயணத்தை ஆரம்பித்த வேளையில் வீதியைக் கடக்க முயன்ற பெண் பாதசாரி மீது மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் உயிரிழந்தவர் நெடொல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச-இ)

## வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

அம்பாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தங்காலை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின்போது, வெளிநாட்டுத் தயாரிப்பு பிஸ்டல் ரக துப்பாக்கியுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் 50 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## சந்திரசேனவுக்கு விளக்கமறியல்

கொழும்பு, மார்ச் 14

ஶ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவை எதிர்வரும் 19ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஶ்ரீலங்கன் விமானசேவைக்கு எயார் பஸ் விமானங்களைக் கொள்வனவு தொடர்பான விசாரணைகளுக்கு வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் நேற்றுமுன்தினம் இலஞ்சம் ஊழல் ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

அவரிடம் 7 மணிநேரம் வாக்குமூலம் பெறப்பட்டிருந்த நிலையில் இலஞ்சம் ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பாதுகாப்புச் சபையில் டிஜிற்றல் முறைமை அறிமுகம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

சமூகப் பாதுகாப்புச் சபையை முற்றிலும் கணினி மயப்படுத்தும் அறிமுக நிகழ்வு, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அமைச்சர் கலாநிதி. உபாலி பன்னிலகே மற்றும் சமூகப் பாதுகாப்புச் சபையின் தவிசாளர் எம். கே. பி. திசாநாயக்க ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நிகழ்வு இடம்பெற்றது.

அறிமுக நிகழ்வைத் தொடர்ந்து யாழ். மாவட்டச் செயலக சமூகப் பாதுகாப்புச் சபை அலுவலகத்தில் நிகழ்நிலை ஊடாக இணைப்புச் செய்யப்பட்ட உறுதிப்பத்திரம், இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் வடமாகாணச் சிரேஷ்ட இணைப்பதிகாரி பா. பிரதீபனால் பயனாளிக்கு வழங்கப்பட்டது.




இதன்மூலம் பயனாளிகள் நிகழ்நிலை மூலம் சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொள்வதற்கான வாய்ப்பும், உறுதிப்பத்திரங்களை உடனடியாக நிகழ்நிலை மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. (க-66)

# காப்பெற் வீதியாகும் மயில்வாகனபுரம் வீதி

கிளிநொச்சி, மார்ச் 14

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மயில்வாகனபுரம், கொழுந்துப் புலவு வீதியைக் காப்பெற் வீதியாகப் புனரமைக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கண்டாவளைப் பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர். இந்த வீதிப் புனரமைப்புக்காக 265 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. சுமார் 5.5 கிலோமீற்றர் தூரம் வரை இந்த வீதி காப்பெற் இடப்பட்டுப் புனரமைக்கப்படவுள்ளது. (ச-113)





# முருகானந்தாக் கல்லூரியில் பசுமை வகுப்பறை திறப்பு

கிளிநொச்சி, மார்ச் 14

கிளீன் சிறீலங்கா செயற்றிட்டத்தின் மூலம், கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியில் பசுமையுடன் கூடிய திறந்த வகுப்பறை நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. கல்லூரியின் முதல்வர் அ. பங்கயற்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் க. அ. சிவநருள்ராஜா, கிளிநொச்சி பிரதி விவசாயப்பணிப்பாளர் வீ. சோதிலட்சுமி ஆகியோர் பசுமையுடன் கூடிய திறந்த வகுப்பறையைத் திறந்துவைத்தனர். நிகழ்வில் முரசுமோட்டை வட்டார பிரதேச சபை உறுப்பினர், திருவையாறு மகாவித்தியாலய அதிபர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

விவசாய அமைச்சின் நிதியுதவியில் நாடு முழுவதும் 50 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு, பசுமையுடன் கூடிய திறந்த வகுப்பறையை உருவாக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க-113)




# தாழ்ச்சி உயர்வு தரும்

தவறுகள், குற்றங்கள், பாவங்கள் புரியாதவர் எவரும் பூமியில் இல்லை. அவற்றை உணர்ந்து மனம் வருந்தி திருந்தி ஆண்டவரிடம் வரும்போது அவர் தம்முடைய தண்டனைத் தீர்ப்பை மாற்றி எமக்குப் புதுவாழ்வு தரக் காத்திருக்கின்றார்.

தாழ்ச்சியும், குற்றமுணர்ந்த நெஞ்சமும், இறைபயமும் எம்மைக் கடவுளுக்கு நெருக்கமாக இட்டுச் செல்லும். பதற்றத்துடன் கூடிய மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டு போவது உண்மையான இறைவேண்டலாகாது. பரிசேயரும், வரிதண்டுபவரும் உவமையில் பரிசேயர் ஒப்பீட்டு இறைவேண்டல் வழியாகத் தன்னை நேர்மையாளர் எனத் தானே அடையாளப்படுத்தி நன்னடத்தைச் சான்றிதழைக் கடவுளிடம் படைக்கிறார். அது ஆண்டவர் முன் அருவருப்பானதாக அமைகிறது. ஆனால் வரிதண்டுபவரோ 'கடவுளே! பாவியாகிய என்மீது இரங்கியருளும்' என்று மார்பில் அடித்துக்கொண்டு மன்றாடினார். கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பினார். பாவிகளுக்காகவும், நோயுற்றோருக்காகவும் இயேசு தம்மை அர்ப்பணித்தார். நாம் பிறருடைய பார்வையில் நேர்மையாளர் என நடிப்பதற்கு பலவித ஆடம்பரங்களைக் காட்டி முகமூடி அணிந்தவராக நடமாடுகிறோம். ஆனால் இறைவன் பார்வையில் மதிப்பு மிக்கவராக மாறுவதற்கு எம்மைத் தாழ்த்தி அவரோடு இணையும் போது தூய்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இரக்கத்தின் ஊற்றாக வாழ்வை அமைக்க முற்படுவோம்.

● எஸ். யேசுதாஸ்

# மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

சாவகச்சேரி - நுணாவில் மேற்கு வீரபத்திரர் கோவில் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் மதிப்பளிப்பும் அறநெறி ஆன்மிகக் கலை நிகழ்வுகளும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியிலுள்ள தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கோவில் அறநெறிப்பாடசாலை அதிபர் ச. குமரதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் எவ். சீ. சத்தியசோதியும், சிறப்பு விருந்தினர்களாக அறநெறிப்பாடசாலையின் பழையமாணவியும் காரைநகர் பிரதேச செயலருமான ரஞ்சனா நவரத்தினம், சாவகச்சேரி நகராட்சிமன்றத் தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஷ் ஆகியோரும் கலந்துகொள்வர். (ச-9)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகளால் மனம் சஞ்சலப்படும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. நண்பர்களுக்காகச் செலவுசெய்யவேண்டி வரும்.

**மிதுனம்:** சாதகமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் ஆதாயம் கிடைக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டுச் சரியாகும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் உறவினர் ஒருவர் மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதரவகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனந்தெரியாத சோர்வு உண்டாகலாம்.

**கும்பம்:** கணவன் – மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மீது சுமத்தப்படும் வரிகளைக் குறையுங்கள்

*அஜித்.பி.பெரேரா வலியுறுத்து*

கொழும்பு, மார்ச் 14
மக்கள் மீது சுமத்தப்படும் வரிகளை அரசாங்கம் குறைக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்.பி.பெரேரா வலியுறுத்தியுள்ளார்.
கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும் போது, உள்நாட்டிலும் எரிபொருள் விலையை அதிகரிக்கவேண்டும் என்று அரசாங்கம் வாதிடுகிறது. காரணம் எதுவாக இருந்தாலும், இன்று நிலவும் இந்த விலைக்குள் பெரும் வரிவிதிப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.
சர்வதேசச் சந்தையில் எரிபொருள் விலை உயர்கின்றபோதும், சர்வதேசச் சந்தையில் இலங்கைக்குரிய வரிகள் அதிகரிக்கப்படுவதில்லை. அதனால் வரிகளைக் குறைத்து அதன் பிரதிபலன்களை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (எ-இ)

# தவறு செய்யாதவர்கள் அஞ்சத் தேவையில்லை



*பிரதி அமைச்சர் சுனில் தெரிவிப்பு*

**கொழும்பு, மார்ச் 14**
**உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி நேர்மையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தவறு செய்யாத எவரும் இதுகுறித்து அச்சமடையத் தேவையில்லை எனப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னாள் பிரதானியின் கைது பல அரசியல்வாதிகளிடையே தேவையற்ற பதற்றத்தை உருவாக்கியுள்ளது. விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குப் பதிலாக, சிலர் வெளியே இருந்து கொண்டு விசாரணைகளைச் சிதைக்க முயல்கின்றனர்.
தவறு செய்யாத எவரும் அச்சமடையத் தேவையில்லை. இந்த விசாரணைகளைத் துரிதப்படுத்த நீதி அமைச்சு தினந்தோறும் வழக்குகளை விசாரணைக்கு எடுத்து வருகிறது - என்றார். (ச-இ)

# சர்வதேச கடல் கடத்தல்கள் இனிமேல் சாத்தியப்படாது

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14
சர்வதேசக் கடற்பரப்பினூடாக முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் கடத்தல்களைத் தடுப்பதற்காக அண்மையில் கடுமையான சட்டங்கள் மற்றும் தண்டனைகளை உள்ளடக்கிய சட்டவரைவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் இனித் தப்புவதற்கு வாய்ப்புகள் இல்லை என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகர எச்சரித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
முப்படையினரும் பொலிஸாரும் சுயாதீனமாகச் செயற்படுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கம் இவ்வாறான போதைப்பொருள் கடத்தலை முடிவுக்குக் கொண்டுவருவதுடன், அதன் வலையமைப்பையும் ஒழிப்பதில் உறுதிபூண்டுள்ளது.
எமது எதிர்காலச் சந்ததியைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு பெற்றோருக்கும் பொதுமக்களுக்கும் உண்டு. சந்தேகத்துக்கிடமான செயற்பாடுகள் தொடர்பாகத் தகவல்களை வழங்குமாறு கோருகிறேன்.
நாட்டின் எதிர்காலத் தலைமுறையினரையும் இளைஞர் சமூகத்தையும் இந்தப் போதைப்பொருளிலிருந்து மீட்டெடுப்போம் என நாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற எமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது- என்றார். (எ-இ)



# மலையகத் தமிழர்கள் தொழிலாளர் சமூகமல்ல!


*மனோ எம்.பி. சுட்டிக்காட்டு*

கொழும்பு, மார்ச் 14
மலையகத் தமிழர்களை வெறும் தொழிலாளர் சமூகமாகச் சுருங்கிவிடாமல், ஒரு தேசிய இனமாக வளர்ந்து வருவதை உறுதிசெய்யவேண்டும் என்று இலங்கையிலுள்ள ஜப்பான் தூதுவர் இசொமடா அகியோவிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதிநிதிகள் குழு ஜப்பானிய உயர்மட்டக் குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மலையகத் தமிழர்கள் எதிர்கொள்ளும் சமூக - பொருளாதாரச் சவால்கள் குறித்து ஜப்பான் இனிவரும் காலங்களில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். குறிப்பாக, தோட்டப்பகுதிகளில் வாழும் புறக்கணிக்கப்பட்ட சமூகங்களுக்கு நேரடிப் பயன் அளிக்கக்கூடிய உதவித் திட்டங்களை வழங்க முன்வாருங்கள்.
எமது மக்களை ஒரு இலங்கைத் தேசிய இனமாக அடையாளம் காணுங்கள். நாம் பல்வேறு துறைகளில் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றோம். தற்போதைய அரசு எமது பிரச்சினைகள் குறித்து நிறையப் பேசினாலும், அவை இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. இலங்கைக்கு அதிகளவு உதவி வரும் நட்பு நாடான ஜப்பான், தனது உதவிகள் நாட்டின் மிகவும் பின்தங்கிய சமூகமான மலையகத் தமிழ் மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்- என்றார். (ச-இ)

# தமிழரது காணிகளில் அத்துமீறி உப்பளம் அமைப்பதற்கு முயற்சி

*மகாவலி அதிகாரசபை மீது குற்றச்சாட்டு*

முல்லைத்தீவு, மார்ச் 14
கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில், குஞ்சுக்கால் வெளிப் பகுதியிலுள்ள தமிழ் மக்களின் பூர்வீக தனியார் காணிகளை, மகாவலி அதிகாரசபை, தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள வர்த்தகருக்கு சட்டவிரோதமாகக் குத்தகைக்கு வழங்கியுள்ளது. அந்தக் காணிகளில் உப்பளம் அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதால் இனமுறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்தச் சட்டவிரோதமான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மாகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.
அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-
தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளும், அதற்கு இடைப்பட்ட மேய்ச்சல் தரை நிலங்களும் மகாவலி அதிகார சபையால், தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள வர்த்தகருக்கு உப்பளம் அமைப்பதற்காக, சட்டங்களுக்கு முரணான வகையில், குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்த நடவடிக்கை அப்பகுதிக்குரிய மக்களிடையே அதிருப்தியையும், இரண்டு இனங்களுக்கு இடையே முறுகல் நிலையையும் தோற்றுவித்துள்ளது.
தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளை இவ்வாறு பறித்தெடுக்க முயலும் நடவடிக்கைகள், அப்பகுதி மக்களிடையே மனவேதனையையும், அரசின் மீதும் அரச நிர்வாகத்தின் மீதும் நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்துகின்றன. எனவே சட்டத்துக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படும் அத்துமீறிய செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்-என்றுள்ளது.
இந்தக் கடிதம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் விசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர், வடக்கு மாகாண ஆளுநர், முல்லைத்தீவு மாவட்டச் செயலர், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் ஆகியோருக்கும் பிரதியிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (க)




# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கண்டி, மார்ச் 14
கண்டி மஹியங்கனை வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன் தினம் உயிரிழந்துள்ளார்.
மோட்டார் சைக்கிள், வீதியைக் கடக்க முயன்ற பாதசாரி ஒருவர் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் கவிழ்ந்து, எதிரே வந்த முச்சக்கரவண்டி ஒன்றுடன் மோதியது.
இதில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்தவர் 18 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச)

# சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் இந்தியா பயணம்

இந்தியா, மார்ச் 14
இந்தியா ஹைதராபாத்தில் நடைபெறும் உள்ளூராட்சிமன்றப் பிரதிநிதிகளுக்கான விசேட செயலமர்வில் பங்கேற்பதற்காக, இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் பொ. குகதாசன் இந்தியா சென்றுள்ளார். இந்தியாவின் ஹைதராபாத்தில் உள்ள தேசிய கிராமிய அபிவிருத்தி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (கிராமசபை) நிறுவனத்தில் இந்த விசேட செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயலமர்வுக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ... உள்ளூராட்சிமன்றப் பிரதிநிதிகள் இந்தியா ... (கு-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 22.04.1930 மறைவு 07.03.2026



யாழ். கோவிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ், யாழ். கோவிலாக்கண்டி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் குமரையா சிவசுப்பிரமணியம்**

அவர்கள் 07.03.2026 சனிக்கிழமை அன்று கோவிலாக்கண்டியில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான குமரையா விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வள்ளிநாயகம் பிள்ளையின் அன்புக் கணவரும் சிவராசன், சேத்திரபாலன் (ஆசிரியர்), சேத்திரகுமார், சத்தியபாமா, சத்தியநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயதேவி, குணவதி, சுதாமதி, காலஞ்சென்ற சம்புக்குமரன், நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசன்னா, பிரதீனா, பிரதீஸ், பிரதீபன், நிகிதா, நீனா, பிரதீப், பிரணேஸ், பிரணீதா, சாருதியா, சஜீவன், சாருஜி, சயிதா, நவீன், நவீனா, எழிலரசி, அரவிந், எலின், தனுயா, பவன், யூலி, மதுஷா, மணிமாறன், யூலி ஆகியோரின் பாசமிகு பேரனும், நெல்வின், கிறிஸ்தல், யஸ்மின், றயன், பவியா, சுஜியா, மாயா, ஆர்யா, சத்யா, மியா, நிலா, ஆதித்யா, அம்றன், அனையா, நெய்ஷா, மிலா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை 15.03.2026 காலை 7.30 மணியளவில் (கோவிலாக்கண்டி, கைதடி) அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு : 077-4738119 / 077-4542750
074-3001721

# 16ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

மண்ணில் 08 . 02 . 1923



விண்ணில் 14 . 03 . 2010

## அமரர் சவரிமுத்து தேவசகாயம்

ஊர் போற்ற நாம் வாழ
அடியெடுத்துக் கொடுத்த தந்தையே
உம்மை எமக்கு தந்தையாகத் தந்த
இறைவனுக்கு பலகோடி நன்றிகள்
என்றும் உம்மை நாம் மறவோம் !
எல்லாப் புகழும் இறைவனுக்கே !
அல்லேலுயா

இல. 28, றக்கா வீதி,
சுண்டிக்குளி.


என்றும் பசுமை நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் , பூட்டப்பிள்ளைகள்.

(CS60965) J-1

# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு கிருபாகரன்

**(முன்னாள் துனுக்காய் பிரதேச சபையின் வருமான பரிசோதகரும், தற்போதைய மாந்தை கிழக்கு, பிரதேச சபையின் வருமான பரிசோதகரும் (RI) மற்றும் துனுக்காய் முத்துமாரி அம்மன் ஆலய தர்மகர்த்தாவும்)**



தோற்றம் 23.10.1971 மறைவு 11.03.2026

உசன் மிருசுவிலை பிறப்பிடமாகவும் துனுக்காயை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு கிருபாகரன் கடந்த 11.03.2026 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு - சிவலோகநாயகி தம்பதியரின் இரண்டாவது அன்பு மகனும், காலஞ்சென்ற கிருஸ்ணசாமி - இந்திராதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், சுபாசினி அவர்களின் பாசமிகு கணவரும், மாதுரியின் பாசமிகு தந்தையும், சரஸ்வதி (லண்டன்) அவர்களின் அன்பு மருமகனும், ஐங்கரன் (Canada), கருணாகரன், சிவாகரன் (Australia), கவிதா, விமலசசி (London) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரேமலதா (Canada), அபர்ணா, அர்ப்பனா (Australia), கேதீஸ்வரன், விமலமூர்த்தி ஆகியோரின் அன்பு மச்சானும், கார்த்திகா (London), சியாமினி (Switzerland), ஆகியோரின் அன்பு மைத்துனரும், நந்தகுமார் (London), வின்சன் (Switzerland) ஆகியோரின் அன்பு சகலனும், ரஜினி, பிரியங்கா, பிரதிகா, அஸ்வினி மற்றும் டிசாந்தன் ஆகியோரின் அன்பு மாமாவும், சங்கீர்த்தனனின் அன்பு சித்தப்பாவும், அபிராமி, மதுரன், கரோலின், டிவின்சன், ஜோர்தன், தக்ஷயா, லக்ஷயா, திருக்ஸன், சஞ்யேஷ் மற்றும் திவ்யேஷ் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் துனுக்காய் பிள்ளையார்கோவில் அருகாமையிலுள்ள சரவணபவன் இல்லத்தில் நாளை (15.03.2026) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் இறுதி அஞ்சலிக்காக முதலில் துனுக்காய் பிரதேசசபையினும் அதனைத்தொடர்ந்து மாந்தை கிழக்கு, பிரதேசசபையிலும் வைக்கப்பட்டு பாலியாறு பூவரசங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
குடும்பத்தினர்
075 330 6909, 077 625 8131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கை இருளில் மூழ்கும்

## சம்பிக்க தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 14**

**இலங்கையின் மின்சக்திப் பாதுகாப்பு மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. நிலக்கரிக் கொள்வனவில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால் எதிர்வரும் ஓகஸ்ட் 27ஆம் திகதியளவில் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் முற்றாகச் செயலிழக்கும் அபாயம் ஏற்படும் என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் மின் உற்பத்தி நிலையங்கள் திட்டமிடப்படாத பராமரிப்புப் பணிகள் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளன.

முதலாவது அலகு ஜூன் மாதத்திலும், இரண்டாவது அலகு ஜூலை மாதத்திலும் பராமரிப்புக்காக மூடப்படவுள்ளன.

முற்பதிவு செய்யப்பட்ட 25 நிலக்கரிக் கப்பல்களில் இதுவரை 11 மட்டுமே வந்துள்ளன. ஏப்ரல் 20ஆம் திகதிக்குள் மீதிக் கப்பல்கள் வராவிட்டால் ஓகஸ்ட் மாதத்தில் மின் உற்பத்தி முடங்கும்.

தரம் குறைந்த நிலக்கரியை இறக்குமதி செய்வதன் மூலம் அரசாங்கம் சூழல் மாசடைவை ஏற்படுத்தியுள்ளது. இந்த நச்சுவாயுக்களின் அதிகரிப்பால் எதிர்காலத்தில் அமில மழை பெய்யும் அபாயமுள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பு ஊடாக அரசாங்கம் மக்களிடமிருந்து 7,000 கோடி ரூபாயை மேலதிகமாகப் பெற்றுள்ளது.

இது முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் சாதாரண பொதுமக்களின் வாழ்வாதாரத்தை நேரடியாகப் பாதித்துள்ளது - என்றார். (ச-இ)



# சுரேஷ் சாலேவைக் காக்க போராட்டத்தில் குதிப்பேன்

## கூறுகிறார் விமல்

கொழும்பு, மார்ச் 14

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலேவைப் பாதுகாப்பதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடத் தயாராகவுள்ளேன் எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அரசியல் பழிவாங்கல்களுக்காகவே அவர் கைதுசெய்யப்பட்டு துப்புரவு இல்லாத சிறைக்கூண்டில் அவரை அடைத்து வைத்துள்ளார்கள். சுகாதார வசதியற்ற மலசலக்கூடத்துக்கு அருகில் சாலேவை வைத்திருப்பதால்அவர்நோயாளியாக்கப்படுவார். சிறைக்கூண்டில் வைத்தவாறு அவரைக்கொலைசெய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. அரசாங்கத்தின் இந்த முறையற்ற செயற்பாட்டுக்கு இடமளிக்கமுடியாது. சுரேஷ் சாலேவைப் பாதுகாப்பதற்கு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தயாராகவுள்ளேன். நாட்டு மக்கள் அனைவரும் இந்தப்போராட்டத்தில் கலந்துக்கொள்ள வேண்டும் - என்றார். (ச-இ)

# விலை அதிகரிப்புகள் சட்டவிரோதமானவை

## நீதிமன்றை நாடுவோமென ஐ.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

குறைந்த விலைக்குக் கொண்டுவந்த எரிபொருளை அதிக விலைக்கு விற்பனை செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்ட அரசாங்கத்துக்கு எதிராக வழக்குத் தொடுக்கவேண்டும். ஒரு மாதத்துக்குத் தேவையான எரிவாயு இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையிலேயே தற்போது எரிவாயு விலையை அதிகரித்து மக்களை நடுத்தெருவுக்குக் கொண்டுவந்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

இந்த விலை அதிகரிப்பு சட்டவிராதே நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கையை மேற்கொண்ட அரசாங்கத்தின் அமைச்சர்களை சிறைக்கு அனுப்பவேண்டும். கடந்த கால அரசாங்கங்களைக் குறைகூறி ஆட்சிக்குவந்த இந்த அரசாங்கத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை மக்கள் எதிர்பார்க்கவில்லை.

மத்திய கிழக்கில் யுத்தநிலை ஏற்பட்டுள்ள நிலையில், எரிபொருள்களின் விலை அதிகரித்துள்ளது. என்றாலும் எமது நாட்டில் ஒரு மாதத்துக்கான எரிபொருள்கள் கைவசம் வைத்திருப்பதாகவும் இப்போதைக்கு விலை அதிகரிப்பு மேற்கொள்ளத் தேவைப்படாது எனவும் ஜனாதிபதி கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் அரசாங்கம் திடீரென் எரிபொருள்களின் விலையை அதிகரித்திக்கிறது. அப்படியாயின் அரசாங்கம் கையிருப்பில் வைத்திருந்த எரிபொருள்களுக்கே அரசாங்கம் விலை அதிகரித்திருக்கிறது.

அதேபோன்று எரிவாயு விலையை நேற்று முதல் அரசாங்கம் அதிகரித்திருக்கிறது. ஒரு மாதத்துக்குத் தேவையான 8ஆயிரம் மெற்றிக் தொன் எரிவாயு கைவசம் இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அப்படியாயின் தற்போது எரிவாயு விலை அதிகரித்திருப்பதும் கைவசம் இருந்த எரிவாயு தொகைக்காகும். அரசாங்கத்தின் இந்த விலை அதிகரிப்புகளை ஏற்றுக்கொள்ளமுடியாது. அதனால் தொடர்ந்தும் மக்கள் இந்த அரசாங்கத்தை நம்பப்போவதில்லை - என்றார். (ச-இ)

# ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துங்கள்

## சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 14

ஊடகவியலாளர்கள் தங்களது தொழில்முறைப் பணிகளை எவ்வித அச்சமுமின்றி முன்னெடுப்பதற்கான சூழலைப் பொலிஸார் உறுதிப்படுத்தவேண்டும் என்று சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது. காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த பெண் ஊடகவியலாளரொருவர் பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்டு அவரது பணிக்கு இடையூறு விளைவிக்கப்பட்ட சம்பவத்துக்கு கண்டனம் வெளியிட்டு மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் தூதரக அதிகாரியின் மொழிபெயர்ப்பு உதவியுடன் குறித்த ஊடகவியலாளர் தகவல்களைப் பெற்றுக்கொண்டிருந்தார்.

இதன்போது சீருடையற்ற, தங்களைப் பொலிஸார் என அடையாளம் காட்டிக்கொண்ட சிலர், அவரது பணிக்குத் தடையாக நடந்துகொண்டதோடு அவர் வைத்திருந்த செய்திக்குறிப்புகளையும் வலுக்கட்டாயமாகப் பறித்துள்ளனர். இந்தச் சம்பவத்தை உடனடியாக விசாரித்து, ஊடகவியலாளரை அவமதித்த மற்றும் பணிக்கு இடையூறு செய்த அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும். என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)



# ரணிலுக்கு எதிரான வழக்கால் பிரதமர், ஜனாதிபதிக்கு ஆபத்து

## உதய கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 14

ஒரு ஜனாதிபதியின் பயணங்களையோ அல்லது அவரது அன்றாட வாழ்வையோ 'உத்தியோகபூர்வமானது' மற்றும் 'தனிப்பட்டது' என்று கோடு போட்டுப் பிரிக்க முடியாது என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார். கொழும்பிலுள்ள அமாரி ஹோட்டலில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது தொடரப்பட்டுள்ள வழக்கு, தற்போதைய ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் வினையாக முடியும். ஒரு ஜனாதிபதி நாள் முழுவதும் பணியிலேயே இருக்கிறார். ஜனாதிபதி ஒருவர் விடுமுறையில் இருக்கும்போது கூட, அவர் அரச கடமைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. அரச தீர்மானங்கள் தொடர்பாகச் சிந்திக்கவேண்டியுள்ளது. அதனால் ஜனாதிபதியின் பயணம் உத்தியோகபூர்வமானதா அல்லது தனிப்பட்டதா என்ற விவாதம் தேவையற்றது. பிரதமர் ஹரிணி அமரசூரிய உலகப் பொருளாதார மாநாட்டுக்குச் சென்றார். உலகப் பொருளாதார மாநாடு என்பதும் ஒரு தனியார் நிறுவனமே. அப்படியானால், நமது பிரதமர் பொது நிதியைப் பயன்படுத்தி அந்தப் பயணத்தை மேற்கொண்டது, இந்த முன்மாதிரி பின்பு தண்டனைக்குரிய குற்றமாகும். ஜனாதிபதி 2025 செப்ரெம்பர் மாதம் ஜப்பான் சென்றார். அப்போது ஜப்பானில் ஒரு இடைக்காலப் பிரதமரே இருந்தார். எனவே அந்தச் சந்திப்பு ஒரு உத்தியோகபூர்வ சந்திப்பாக அமையவில்லை. அந்தப் பயணம் ஒரு அரசியல் பயணமே தவிர, உத்தியோகபூர்வப் பயணம் அல்ல. ரணில் விக்கிரமசிங்கவைப் பழிவாங்குவதற்காக தாக்கல் செய்யும் இந்த வழக்கின் மூலம் உங்களது குழியை நீங்களே தோண்டிக் கொள்கிறீர்கள். ரணில் விக்கிரமசிங்க விளக்கமறியலில் இருந்த நாள்களைப்போல மூன்று மடங்கு காலம் நீங்கள் சிறையில் இருக்க வேண்டிய நிலை இந்த முன்மாதிரியால் ஏற்படும்-என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்.மத்திய கல்லூரி வீரர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 14
'வடக்கின் பெரும்போர்' என அழைக்கப்படும் யாழ். மத்திய கல்லூரிக்கும், யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 119ஆவது துடுப்பாட்டப்போட்டியில், வெற்றிக்கிண்ணத்தைத் தமதாக்கிய மத்திய கல்லூரி வீரர்களுக்கான கௌரவிப்பு, கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. 'வடக்கின் பெரும்போர்' துடுப்பாட்டப் போட்டி கடந்த 5ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி 7ஆம் திகதி சனிக்கிழமை வரை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. (க-66)

## மாணவர்கள் கௌரவிப்பு!

சாவகச்சேரி நுணாவில் வீரபத்திர ஆலய அறநெறி பாடசாலை முன்னெடுக்கும், மாணவர் கௌரவிப்பும், ஆன்மீக கலைநிகழ்வுகளும் இன்று நடைபெறவுள்ளன.சாவகச்சேரி சிவன் கோவில் வீதியிலுள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில், வீரபத்திரர் ஆலய அறநெறி பாடசாலை அதிபர் ச.குமாரதாஸ் தலைமையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் எவ்.சி.சத்தியசோதி கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச செயலர் றஞ்சனா நவரத்தினம், சாவகச்சேரி நகரசபை தலைவர் வ.சிறீபிரகாஸ் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய அதிபர் ம.லினாஸ்குமார் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேசசெயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வ.சிவமணி, நுணாவில் மேற்கு கிராம உத்தியோகத்தர் ப.பிரதீபன், சாவகச்சேரி கு.ரிசாங்கக் குருக்கள், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் மு.கோகிலராஜ், பத்திரகாளி சமேத வீரபத்திர ஆலய பரிபாலனசபைத் தலைவர் கு.பிறேம்குமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம113)

**பணியாளர்கள் தேவை**
சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
1. சுத்திகரிப்பாளர் (Service)
2. இயந்திர வல்லுனர் (Mechanic)
தொடர்பு: 076 919 3800
(CR/47216) N-1



## உத்தரிய மாதா கோவில் வீதி தார் வீதியாகச் செப்பனிடல்

யாழ்ப்பாணம், மார்ச் 14
வலிகாமம் வடக்கு உத்தரிய மாதா கோவில் வீதி தார் வீதியாகச் செப்பனிடப்பட்டு, புதிய பெயர்ப்பலகை பொருத்தப்பட்டுள்ளது. வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் கடந்த செவ்வாய்க்கிழமை வீதியை மக்கள் பாவனைக்குத் திறந்து வைத்தார்.
வீதிப்பெயர்ப் பலகைக்கான அனுசரணையைச் சபரி ஹோட்டல் நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர். (க-66)

## பொதுப்போக்குவரத்தில் பெண்களுக்கு இடையூறு

### இ.போ.ச. காப்பாளருக்குத் தண்டம்

மன்னார், மார்ச் 14
பொதுப்போக்குவரத்தின் போது, பெண்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில், இலங்கை போக்குவரத்துச்சபையின் காப்பாளருக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின்தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
மன்னாரில் பொதுப்போக்குவரத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட அசௌகரியம் தொடர்பில், அதிகாரசபையின் தலையீட்டுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-
கொழும்பில் இருந்து தனியார் பேருந்தில் பயணித்து மன்னாரை வந்தடைந்த இரு பெண்கள், அதிகாலையில் தலைமன்னார் நோக்கிச் செல்வதற்காக, இலங்கை போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான (இ.போ.ச.) பேருந்தில் ஏற முற்பட்டுள்ளனர். எனினும், அவர்கள் முன்னர் தனியார் பேருந்தில் பயணித்ததைக் காரணம் காட்டி, காப்பாளர் பெண்கள் இருவரையும் இலங்கை போக்குவரத்துச்சபையின் பேருந்தில் ஏற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.
பாதிக்கப்பட்ட தரப்பினரால், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.
இதுதொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, இலங்கை போக்குவரத்துச்சபையின் (வடக்கு) மன்னார் சாலை முகாமையாளருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது. உரிய விசாரணைகளை உடனடியாக மேற்கொண்ட மன்னார் சாலை முகாமையாளர், குறித்த இ.போ.ச. காப்பாளருக்குக் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், அவருக்கு ஒரு நாள் வேதனத்தைத் தண்டமாகவும் அறிவிட்டுள்ளார். (க-66)

இரு மனங்களின் விருப்பத்திற்கும்,
இரு குடும்பங்களின் புதிய உறவுகளுக்கும்
நம்பிக்கையான பாலம்.
76 ஆண்டுகளாக வெற்றிகரமாக செயல்பட்டுவரும்
**சர்வதேச புலவர் திருமண சேவை**
உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப சிறந்த வரன்/ மணமக்களை தேர்வு செய்ய இன்றே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு எண்கள்:
021 222 7147, 077 075 7610, 077 075 7896
(CS/60874) J-1

**கள்ளு ஏற்றுமதிக்கு முதலீட்டாளர்கள் தேவை**
பனங்கள்ளு, பதனீர், பனம்பாணி மற்றும் பனம்சாரயம் என்பவற்றுக்கு இப்பொழுது சர்வதேச சந்தையில் அதிகமான கேள்வி உள்ளது. எங்களிடம் பலகோடி ரூபாய்க்கான கொள்வனவு கட்டளைகளும், கடந்த ஐந்து வருடங்களாக கள்ளினை ஏற்றுமதி செய்த அனுபவமும், சட்ட ரீதியான ஆவணங்களும் மிகப்பெரிய தொழிற்சாலையும் தயாராக உள்ளது.
இந்த வியாபாரத்தை மேலும் விரிவுபடுத்த முதலீட்டாளர்களோ அல்லது பங்குதாரர்களோ உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ தேவை.
தொடர்பு:
0777 15 70 70



## 17 மாவட்டங்களை உள்ளடக்கி நீர்கொழும்பில் மகளிர் தினம்

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் 17 மாவட்டங்களை உள்ளடக்கி, சர்வதேச மகளிர் தினம், நீர்கொழும்பிலுள்ள ருக்மணிதேவி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் கலை நிகழ்வுகள், மக்கள் மன்றம் பெண்களுக்கான கைத்தொழிற்சந்தை, தலைமைத் துவம் மற்றும் தன்னம்பிக்கை என்ற தனிப்பொருளுக்கு அமைவான விருதும், சான்றிதழ்கள் வழங்கல், சிந்து சர என்ற தமிழ், சிங்கள மொழியிலான பத்திரிகை வெளியீடு உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன. (க-213)

### வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம்
### பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்திற்கு விற்கப்படவுள்ளன.
காலம் : **23.03.2026 திங்கட்கிழமை காலை 10.00 மணி**
இடம் : **தலைமை அலுவலகம், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்**

**பொருட்கள் விபரம்**
இலத்திரனியல் பொருட்கள். வாகன பற்றரிகள். உலோகப் பொருட்கள். மின்னியல் பொருட்கள். தளபாடப் பொருட்கள். பழைய மரங்கள் வாகன பழைய பொருட்கள். ரயர்கள் மற்றும் வெற்று தார் பரல்கள். பழைய பத்திரிகைகள். கண்ணாடி போத்தல்கள்

**நிபந்தனைகள்**
01. ஆர்வமுடைய கேள்விதாரர்கள் மீளளிக்க முடியாத கட்டணம் ரூபா 500.00 இனை ஏலவிற்பனை தினத்தன்று மு.ப. 10.00மணிக்கு முன்பாக தலைமை அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்
02. சித்தியடைந்த ஏலத்தாரர் ஒப்புக்கொண்ட ஏலத்தொகை முழுவதையும் செலுத்திப் பொருட்களை அன்றைய தினமே அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்
03. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் தொலைபேசி இலக்கம் 0212240017

தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 14.03.2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உள்ளூராட்சி...

உள்ளூராட்சித் தேர்தல் அண்மையில் நடைபெற்று, புதிய சபைகள் நிர்வாகங்களைப் பொறுப்பேற்றுள்ளன. இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தத்தமது செலவு அறிக்கைகளைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று தேர்தல்கள் திணைக்களத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு 685 வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில், அவர்களில் 606 வேட்பாளர்கள் மட்டுமே செலவு அறிக்கைகளைத் தாக்கல் செய்துள்ளனர். 79 வேட்பாளர்கள் இன்னமும் கணக்கு அறிக்கைகளைத் தாக்கல் செய்யவில்லை. இதையடுத்தே, அவர்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் தனித்தனியாக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்ட நிலையில், அனைத்து வழக்குகளும் தவணையிடப்பட்டுள்ளன. (அ-ம-113)

### பழி...

யுள்ளனர். சண்டிலிப்பாய் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டமான, அதன் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பவானந்தராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற வலி. தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்களுக்கு ஆரம்பத்தில் அனுமதி வழங்கப்படவில்லை. இதையடுத்தே, தாம் திட்டமிட்டுப் புறக்கணிப்புக்கும் பழிவாங்கலுக்கும் உட்படுகின்றோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

வலி. தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

சண்டிலிப்பாய் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்துக்கு நாம் சென்ற போது, எமக்கு அனுமதியில்லை என்று தெரிவித்து, எம்மை வெளியேற்றும் வகையில் செயற்பட்டனர். எனினும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கான சுற்றுநிருபத்துக்கு அமைய, அதில் கலந்துகொள்ள எமக்கு உரிமை உள்ளதாகத் தெரிவித்து சுற்றுநிருபத்தை வாசித்துக் காட்டினோம். அதற்குப் பின்னரே எமக்கு அனுமதி வழங்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் பவானந்தராஜா எம்மைப் புறக்கணிக்கும் வகையில் தொடர்ச்சியாக இவ்வாறு செயற்பட்டு வருகின்றார். இது கண்டிக்கத்தக்க விடயம். இத்தகைய செயற்பாடுகளுக்கு நாம் இமளிக்க மாட்டோம் - என்றனர். (அ-ம-27)

### எம்.பி.யைக்...

யானது என சிரேஷ்ட சட்டத்தரணி குருபரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனவரி 20ஆம் திகதி நடைபெற்ற சாவகச்சேரி நகரசபை அமர்வு தொடர்பில், சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் மற்றும் உபதவிசாளர் ஆகியோருக்கு எதிராக வடமாகாண ஆளுநரால் விசேட தனிநபர் விசாரணை அமைக்கப்பட்டிருந்தது. அந்த விசாரணை நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது. ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் நடைபெற்ற இந்த விசாரணையில், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் நகரசபைச் செயலாளர் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

நேற்றைய விசாரணையின் முக்கிய அம்சமாக, உபதவிசாளர் ஞா. கிஷோர் சார்பில் சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் முன்னிலையாகி வாதாடினார். கடந்த ஜனவரி 20ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில், 50 ஆண்டுகளுக்கும் மேலான பழைய கட்டடங்களுக்கு 'தகுதிச் சான்றிதழ்' கோருவது குறித்து உபதவிசாளர் விமர்சித்திருந்தார். இந்த உரை உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலை மீறிய செயல் என்ற குற்றச்சாட்டு தொடர்பிலேயே நேற்றைய வாதங்கள் அமைந்தன.

உபதவிசாளரின் உரை குறித்து வாதாடிய சட்டத்தரணி குருபரன், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகார வரம்புக்கு உட்பட்ட விடயங்கள் குறித்துப் பேசுவதற்கு மக்கள் பிரதிநிதிகளுக்கு முழு உரிமை உண்டு எனச் சுட்டிக்காட்டினார். வர்த்தக உரிம வரி மற்றும் அது சார்ந்த துணை விதிகளை உருவாக்கும் அதிகாரம் சபைக்கு உள்ள நிலையில், பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் நலன் சார்ந்து பேசுவது ஓர் உறுப்பினரின் கடமையாகும். உபதவிசாளர் எந்தவொரு அதிகாரியையும் தனிப்பட்ட முறையில் விமர்சிக்கவில்லை என்றும், பொதுக் கொள்கைகளைச் சரியான திசைக்குக் கொண்டு செல்லவே அவர் முயன்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தவிசாளர் மீதான குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த சட்டத்தரணி, 'உபதவிசாளரின் பேச்சைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டார்' என ஆளுநர் முன்வைத்த குற்றச்சாட்டைச் சாடினார். யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களைக் குழப்பும் வகையில் பேசும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக் கட்டுப்படுத்த முடியாத ஆளுநர், சாவகச்சேரி தவிசாளருக்கு எதிராக இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைப்பது விந்தையானது என அவர் தெரிவித்தார்.

அத்துடன், முறையான அதிகாரப் பகிர்வுடன் இயங்கும் சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் மற்றும் உபதவிசாளரை நீக்க முற்படுவதன் பின்னணியில் அரசியல் உள்நோக்கம் இருக்கலாம் என்ற சந்தேகத்தையும் சட்டத்தரணி எழுப்பினார். குறிப்பிட்ட ஒரு கட்சி நகர சபையைக் கைப்பற்றும் நோக்கில் இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா சந்தேகம் உள்ளதாகவும் சட்டத்தரணி குருபரன் தனது வாதத்தில் சுட்டிக்காட்டினார்.

தற்போது அனைத்து சாட்சி விசாரணைகளும் நிறைவடைந்துள்ள நிலையில், ஒருவார காலத்துக்குள் எழுத்துமூல சமர்ப்பணங்களைத் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இதனையடுத்து, விசாரணை அதிகாரி க.அரியநாயகம் தனது இறுதி அறிக்கையை வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கவுள்ளார். (அ-ம-26-20)

### 10 பேருக்கு...

தண்டம் விதிக்கப்பட்டது. பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பிரிவுகளில் கடந்த வாரம் டெங்குக் கட்டுப்பாட்டு களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது நுளம்பு பெருகக்கூடியவாறான வகையில் சூழலைப் பேணிய 10 ஆதனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக நகர சபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதவான் இந்துஜா சிவலிங்கம் முன்பாக நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையிலேயே, குற்றஞ்சாட்டப்பட்ட ஆதனங்களின் உரிமையாளர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் ஆதன உரிமையாளர்களுக்கு 66 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (அ-ம-100)

### மகாவலி...

நீர்ப்பாசனம் மற்றும் காணி ஆகிய துறைகளுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் கே.டி.லால்காந்த தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திரிவச்சகுளம் என்னும் இடத்தில் பெரும்பான்மை இனத்தவர்களால் 600 ஏக்கருக்கும் மேற்பட்ட அடர்வனங்கள் சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ளன. மகாவலி அதிகாரசபை தனது ஆளுகைக்குட்பட்ட இடம் என உரிமைகோரும் பகுதியிலேயே இவ்வாறு காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இந்தக் காடழிப்புக்கு மகாவலி அதிகாரசபை துணைபோகின்றது.

தமிழர்கள் தமது பூர்வீக நிலங்களில் சிறு தடியை வெட்டினால்கூட, காடழிப்பு என்ற குற்றச்சாட்டில் கைது செய்கின்ற தரப்பு, 600 ஏக்கருக்கும் மேற்பட்ட அடர்வனங்கள் அழிக்கப்படும்போது எதுவுமே பேசாமல் வேடிக்கை பார்ப்பது கண்டனத்துக்கு உரியது.

இவ்வாறு அடர்வனங்கள் அழிக்கப்பட்ட பகுதிக்கு அருகே உள்ள தமிழர்களின் வயல் நிலங்களை பெரும்பான்மை இனத்தவர்கள் பத்துப் பேருக்கு ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டிலும் மகாவலி அதிகாரசபை ஈடுபட்டு வருகின்றது. இந்த விடயங்கள் தொடர்பில் நான் நேரடியாகப் பார்வையிட்டதுடன், உரிய ஆதாரங்களும் என்னிடம் உள்ளன. இந்த விடயத்தில் மரண தண்டனைக்குரிய குற்றச்செயலை மகாவலி அதிகார சபை செய்கின்றது. ஆதலால், மகாவலி அதிகாரசபைக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் - என்றார். (அ-ம-110)

### 25 வீதமான...

இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 25 வீதமான மக்கள் வறுமையின் பிடியில் உள்ளனர். அவர்களில் 80 வீதமானவர்கள் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். ஆதலால், வறுமை ஒழிப்புச் செயற்றிட்டம் கிராமங்களில் இருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் வறுமைக்கான உண்மையான காரணங்களைக் கண்டறிந்து, சமூக அபிவிருத்தி சபையின் பிரதிநிதிகளுடன் இணைந்து முறையான அபிவிருத்தித் திட்டங்களை வகுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மத்திய கிழக்குப் போரால், உலகப் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது. எனினும், இலங்கைக்க அதன் பாதிப்புக் குறைவாகவே உள்ளது. நாங்கள் பொருளாதாரத்தைச் சீர் செய்யாமல் இருந்திருந்தால், மீண்டும் வரிசை யுகம் ஏற்பட்டிருக்கும் - என்றார். (அ-ம)

### மயிலிட்டிக்...

வியாழக்கிழமை அங்கு களப் பயணம் மேற்கொண்ட அமைச்சர் சந்திரசேகர், மக்களுடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார். இதைத் தொடர்ந்தே, பாதுகாப்புத் தரப்பிடம் உள்ள மயிலிட்டிக் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மக்களுக்கு உறுதியளித்தார்.

வலி. வடக்கில் உள்ள ஒரு தொகுதிக் காணிகள், எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் விடுவிக்கப்படும் என்று அமைச்சர் சந்திரசேகர் ஏற்கனவே தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

### 20ஆம்...

சபைத் தேர்தலை எத்தகைய முறையின் கீழ் நடத்துவது என்பது தொடர்பில் இன்னமும் தீர்க்கமான நிலைப்பாடு எட்டப்படாத நிலையில், அது தொடர்பில் ஆராய்வதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவே எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதன்முறையாகக் கூடவுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளணிவளப் பற்றாக்குறையால் முடங்கும் முல்லை மருத்துவமனை



**கொழும்பு, மார்ச் 14**

**முல்லைத்தீவு பிரதேச மருத்துவமனையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை மற்றும் உட்கட்டமைப்பு வசதியீனங்கள் காரண மாக, பொதுமக்களுக்கு வினைத்திறனான மருத்துவச் சேவையை வழங்குவதில் சவால்கள் ஏற்பட்டுள்ளதாக மருத் துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது.**

மருத்துவமனைக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்று களநிலைவ ரங்கள் குறித்து பார்வையிட்ட போது இந்த விடயம் தெரிவிக் கப்பட்டது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் கள், சிற்றூழியர்கள் மற்றும் போதுமான எண்ணிக்கை யிலான மருத்துவர்கள் இல் லாத காரணத்தால், இருக்கும் குறைந்தளவு ஊழியர்க ளுக்கு வேலைப்பளு அதிகரித் துள்ளது. இது நோயாளர்க ளைக் கவனிக்கும் தரத்தை நேரடியாகப் பாதித்துள்ளது.

மின்சார இணைப்புகளில் நில வும் கோளாறுகள் காரணமாகச் சில முக்கியமான அறைகள் முடங்கி யுள்ளன. போதிய இட வசதி இருந்தும் தொழில்நுட்பக் குறைபாடு களால் அவற்றை நோயாளர்களின் சிகிச்சைக்காகப் பயன் படுத்த முடியாமல் உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தப் பிரச்சினைகள் குறித்து உரிய தரப் பினருடன் பேசி தீர்வு பெற்றுத் தரப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்தார்.

(ச-246)

## வேலையாட்கள் தேவை

சுன்னாத்தில் அமைந்துள்ள புடைவையகத் திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண், பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விபரங்களுக்கு: 076 63 23 554

# பொன் அணிகளின் போரில் சென்.பற்றிக்ஸ் முன்னிலை!

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல் லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரிக்கும் இடையிலான பொன் அணிகளின் போரில், முதலா வது இன்னிங்ஸில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி முன்னிலை பெற்றுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத் தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டி ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத் தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி அனைத்துவிக்கெட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய சென்.பற் றிக்ஸ்கல்லூரி அணி அனைத்துவிக் கெட்டுக்களையும் இழந்து 225 ஓட் டங்களைப் பெற்றது.

49 ஓட்டங்கள் பின்தங்கிய நிலை யில், இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்ப்பாணக் கல்லூரி நேற்றைய நாள் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 99 ஓட்டங்களைப் பெற் றுள்ளது.

ஆட்டத்தின் இறுதிநாள் இன்றாகும்.

(ம)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மானிப்பாய் நகரத்தில் 6 நிலபரப்புக் காணி விற்பனைக்கு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- மானிப்பாய் நகரம் சோதி வேம்படி வித்தியாலயம் அருகில் வேம்டி வீதியில்.
- யாழ் - காரைநகர் பிரதான வீதி 300 m தூரத்தில்
- வங்கிகள், பாடசாலைகள் பிரதான வர்த்தக நிலையங்கள் 400m தூரத்தில்.
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை. முன் காணி துண்டு 32,00000 (முப்பத்தி இரண்டு இலட்சம்)
- நடு துண்டு ஒரு பரப்பின் விலை 28,00000 (இருபத்தி எட்டு இலட்சம்)
- பின் துண்டு ஒரு பரப்பின் விலை 26,00000 (இருபத்தி ஆறு இலட்சம்)
- பார்வையிடும் நேரம் - காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- 074 029 2338, 076 990 3039, 077 288 0152

(CS 31437) A

# மண்ணெண்ணெய் யாழில் விநியோகம்

யாழ்ப்பாணம்,மார்ச் 14

குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற் பனை நிலையங்களில் கடந்த இரண்டு நாள்களாக மண்ணெண்ணெய் தடை யின்றி விநியோகிக்கப்பட்டுவருகின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தா பனத்தின் காங்கேசன்துறையில் உள்ள எரிபொருள் சேமிப்பு நிலையத்திலி ருந்து, பவுசர் மூலம் சகல எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கும் மண் ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுவருகின்றது. இத னால் கடற் றொழிலாளர், விசாயிகள் மற்றும் பொதுமக்கள் தடையின்றி மண் ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

(க-17)

## மரண அறிவித்தல்




சாவகச்சேரி கோவில் குடியிருப்பு, கட்டுக்காணி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட பரமகுரு நாகரத்தினம் அவர்கள் நேற்று (13.03.2026) வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம் கந்தையா - செல்லம் தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - எள்ளுப்பிள்ளை தம்பதியி னரின் மருமகளும், காலஞ்சென்ற பரமகுரு (சின்னமணி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் (சந்திரன் KPN), கெங்கேஸ்வரன் (கெங்கா) மற்றும் சுபத்திரா (ராசாத்தி), சுமங்கலா (கலா), சதீஸ்குமார் (அப்பன்-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஜெயவதி மற்றும் இராஜரதி, பரமேஸ்வரன், சண்முகநாதன் (சிவா), செல்வநாயகி (செல்வி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற A.K. சுந்தரம் (A.K.S) மற்றும் A.K.சபாரத்தினம், காலஞ்சென்றவர்களான A.K. துரைரட்ணம், A.K.இராசையா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரிசிகேசன், சிந்தூரி, சுயந்தன் - லகோஷனா, துஷாந்தி, சுரேகன் - அபிலாயினி, சண்சயன் - நர்த்தனா, மயூரன் - சுலக்சனா, காலஞ்சென்ற தபோவரன் மற்றும் றிதன், திவ்வியன், றிந்துசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சோசனா, திபிசனா, பபிசன், தஸ்வந், அக்ஷரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.03.2026) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
0773164195, 0773146038

(CR 47223) A

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் காக்கைதீவு பிரதான வீதி முகப்புடன் 20 பரக்குக் காணி விற்பனைக்கு.**

- யாழ் மாநகர சபை எல்லைக்குள் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- இரண்டு பரப்பாகவும் ஒன்றரை பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- வீடுகள் அமைக்கவும், வியாபார நிலையங்கள் அமைக்கவும் உகந்த காணி.
- வீதி முகப்புடன் பரப்பு இருபது இலட்சம், முதல் பின்பகுதிகள் 12 இலட்சம், 10 இலட்சம் என விலைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.
- யாழ். நகரம் 2 km தூரம் காக்கைதீவு மீன் சந்தை 200 m தூரம்.

தொடர்பு:- 076 990 3039
077 468 3354

(CS 31438) A

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 [illegible] விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில்14.03. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org